# நவீன கால மருத்துவத்துறையின் வளர்ச்சியில் மத்தியகால முஸ்லிம் மருத்துவர்களின் பங்களிப்பு

S.M.Hakeema Beevi[1], A.K.Siyana[2]

[1&2] Assistant lecturer, Depart of Islamic Studies, South Eastern University of Sri Lanka
aksiyana94@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :** மனித உருவாக்கத்தின் ஆரம்பம் மருத்துவத்தின் துவக்கமாகும். கிரேக்க உரோம, பாரசீகர்களைத் தொடர்ந்து ஐரோப்பியர்களிடையே மருத்துவ அறிவியல் வளர்ச்சி பாரிய அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது. இதில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள் இன்று குறைவாகும். ஆனால் ஐரோப்பியர்களின் அறிவியல் முன்னேற்றத்தில் மத்திய கால முஸ்லிம்களின் வகிபாகம் அளப்பெரியதாகும். அந்தவகையில் மத்தியகால முஸ்லிம் மருத்துவ அறிஞர்கள் நவீன கால மருத்துவ விஞ்ஞான வளர்ச்சிக்கு பங்களித்துள்ள விதம் பற்றி கண்டறிதலை நோக்காகக் கொண்டு பண்பு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டள்ளன. மத்திய கால முஸ்லிம்களின் மருத்துவ அறிவியல் வளரச்சியில் அல்குர்ஆன், சுன்னாவின் பங்கு மிக முக்கியமானது, கிரேக்கால அறிவு முதுசெங்களை அரேபிய முஸ்லிம்கள் மூடர்களாக பின்பற்றவில்லை, மாறாக அதில் ஆய்வுகளை மேற்கொண்டு பிழையானவற்றை அகற்றி அனுபவ முறையில் ஏற்று விளக்கவுரைகளையும் எழுதி விருத்தி செய்துள்ளார்கள், முஸ்லிம் மருத்துவர்கள் நூல்கள் மட்டுன்றி பல நோய்களையும் அதற்கான சிகிச்சை முறைகளையும் கண்டுபிடித்ததுடன் இவர்களுடைய மருத்துவ நூல்கள் கண்டு பிடிப்புக்கள் அனைத்தும் ஐரோப்பியர்களால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு அவர்களுடைய பல்கலைக்கழங்களில் பாட நூலாகவும், நூல் நிலையங்களிலும் இன்றும் காணமுடிகின்றன. மத்திய கால முஸ்லிம்கள் இன்றைய காலத்தைப் போல அல்லாது பல சொகுசுகளுடனும் சலுகைகளுடனும் தொழிநுட்பத்துடனும் மருத்துவ மனைகளை அமைத்து ஐரோப்பாவிற்கு வழிகாட்டியுள்ளார்கள், மத்திய காலத்தில் முஸ்லிம்கள் மருத்துவத்துறையில் பேர்போனவர்களாகவும், ஐரோப்பியர்கள் இருண்ட யுகத்தில் இருந்து அறிவைத்தேடி மத்திய கிழக்கிற்கு பயணித்து அதனைப் பெற்றுக் கொண்டதாகவும் ஐரோப்பிய அறிஞர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் போன்ற விடயங்கள் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதுடன் மத்திய கால முஸ்லிம்களின் மருத்துவ துறையின் பங்களிப்பின் சிறப்பை எடுத்துக் காட்டுவதாக இவ்வாய்வின் முக்கியத்துவம் அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** மத்திய காலம் முஸ்லிம்கள், மருத்துவத் துறை, நூல்கள் கண்டுபிடிப்புகள், நவீன காலம்

## அறிமுகம்

அறிவியல் துறையில் அனைவராலும் போற்றப்படும் ஒரு துறையாக மருத்துவவியல் காணப்படுகின்றது. இறைவனுக்கு அடுத்து மனிதன் தன்னை பாதுகாக்க கையேந்தும் ஒன்றாக மருத்துவர்களும் மருத்துவ மனைகளும் விளங்குகின்றன. அந்தவகையில், மனித இனத்தின் தோற்றம் மருத்துவத்தின் ஆரம்பமாக காணப்படுகின்றது. 'மிகப் புராதான காலத்தில்,

மனிதன்,உடைந்த எலும்புகளை ஒட்டவைக்க மாட்டையும், வலிகளைப் போக்க அவனுக்குத் தெரிந்த மூலிகைகளையும் பயன்படுத்தியதோடு மருத்துவத்தின் வரலாறு ஆரம்பமாகியுள்ளது'(அபூபக்கர்,2001). பண்டைய கால மக்கள் மனிதனுக்கு ஏற்படும் நோய்கள் மாந்திரீகம் மூலமும், கடவுளின் கோபத்தினாலும், தீய ஆவிகள் ஆகியவற்றின் விளைவாகவே ஏற்டுகின்றது என நம்பினார்கள். அதன் பின்னர் கிரேக்க காலம் செழிப்படைந்ததைத் தொடர்ந்து மருத்துவம் கணிஷமான அளவு முன்னேற்றம் அடைந்தது எனலாம்.

மருத்துவத்தின் தந்தையாக இன்று நோக்கப்படுகின்ற ஹிப்போகிரடீஸ் (கி.மு.460-377) நோய்கள் உடல் ரீதியான காரணங்களால் ஏற்படுவனவே அன்றி மாந்திரீக காரணங்களால் அல்ல என்ற கருத்தை முதன் முதலில் வலியுறுத்தினார். எகிப்தை ஆட்சி செய்த தொலமிகளின் காலத்தில் கிரேக்க மருத்துவம் எகிப்தில் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அலெக்கஸாந்திரியா மருத்துவ துறையில் வளர்ச்சி காண்டது. எகிப்தின் வீழ்ச்சியின் போது கிரேக்க மருத்துவம் உரோமர்களை நோக்கி செல்வாக்கும் பெற்றது. உரோம நகரில் மருத்துவராக தொழில் புரிந்த கலன் மருத்துவம் பற்றி பல நூல்களை எழுதினார். இவ்வாறு அறிவியல் ரீதியில் வளர்ச்சி பெற்று வந்த கிரேக்க மருத்துவம் க.பி 5ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட உரோம வீழ்ச்சியைத் தொடர்ந்து தேக்க நிலைக்குச் சென்றது (அபூபக்கர்,2001).

இக்கால கட்டத்தில்தான் முஸ்லிம்கள் பண்பாடு நாகரீகம் என்பவற்றில் எழுச்சி கண்டு உலகெங்கும் பரவத் தொடங்கினர். அரேபிய நிலத்தை விட்டு அதனை சூழவும் தூர பிரதேசங்களுக்கும் இஸ்லாத்தின் தூய தன்மையை எடுத்துக்கூறப்பட்டவர்கள் அங்கே தனது இருப்பிடங்களை ஆக்கிக் கொண்டு அச்சமூக மக்களுடன் ஒன்றாக வாழவும் அவர்களுடைய வாழ்வியல் அம்சங்களையும் ஆராயத் தொடங்கினார்கள். 'இஸ்லாமிய பேரரசு மொழிகள், பழக்கவழக்கங்கள், மரபுகள் மற்றும் மத அடிப்படையில் பன்முக கலாசாரத்தை கொண்டிருந்தார்கள். தங்களை சுற்றியிருந்த நாடுளை கைபற்ற முஸ்லிம்கள் அரேபியாவிலிருந்து புறப்பட்டனர். இவ்வாறு இஸ்லாமியப் பேரரசு மூன்று கண்டங்களிலிருந்து முஸ்லிம்கள், அரேபியர்கள், பாரசீகர்கள், துருக்கியர்கள், ஆபிரிக்கர்கள், ரோமர்கள், மட்டுல்லாமல் யூதர்கள் கிறிஸ்தவர்கள் மற்றும் பிற மதங்களுடனும் தொடர்பு கொண்டிருந்தனர்'. (Yasmeen Mahnaz Faruqi, 2016).

இதனைத் தொடர்ந்து கிரேக்கர்களின் மருத்துவம் அரேபிய முஸ்லிம்களின் அரவணைப்பினாலும் ஆராய்ச்சியின் மேல் அரேபிய முஸ்லிம்கள் கொண்டு ஆர்வமும் கிரேக்க மருத்துவத்தில் படிந்திருந்த தவறான விளக்கங்கள், மூடநம்பிக்கைகள், தெளிவின்மை போன்றவற்றை அகற்றி அதனை பிழை திருத்தி ஆய்வுகளை மேற்கொண்டு அதனூடாக அதனை சரி கண்டு எழுதப்படாதிருந்த அதன் பக்கங்களை கண்டுபிடிப்புக்களாலும் ஆய்வுகளினாலும் நிரப்பி உயிர்கொடுத்தனர். மேலும் கிரேக்க மருத்துவ நூல்களை தமது மொழியில் மொழிபெயர்த்ததோடு அவற்றிக்கு சுருக்கங்களும் விளக்க உரைகளும் எழுதினார்கள்.


ISBN 978-624-5736-14-0

முஸ்லிம்கள் மருத்துவத்துறையை நோக்கி ஆழ்ந்த பயணத்தை மேற்கொள்வதற்கு அல்குர்ஆன் மற்றும் சுன்னாவின் தூண்டுகோல்களும் விஞ்ஞானக் கருத்துக்களின் தேடலுமே ஆகும். மருத்துவம் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

''அதன் வயிற்றிலிருந்து பல வித நிறங்களையுடைய ஒரு பானம் (தேன்) வெளியாகிறது. அதில் மனிதர்களுக்கு (பணி தீர்க்க வல்ல) சிகிச்சை உண்டு. நிச்சயமாக இதிலும் சிந்தித்து உணரக்கூடிய மக்களுக்கு ஓர் அத்தாட்சி இருக்கின்றது. (16: 69)

இதனை மேலும் விளக்கமாக ஹதீஸ் பின்வருமாறு சுட்டிக்காட்டகின்றது. ''நபியவர்கள் கூறியதாக உஸாமா பின் ஷரீக் (றழி) அறிவிக்கிறார்கள்: அடியார்களே மருத்துவம் செய்யுங்கள்! எந்த நோயையும் அதற்குரிய மருந்தில்லாமல் அல்லாஹ் இறக்கவில்லை.'' (நூல், திர்மிதி.1961,அபூதாவூத்.3357)

மற்றுமொரு இடத்தில் ஜாபிர் (றழி) அறிவிக்கிறார்கள்: ''மரணத்தை தவிர ஒவ்வொரு நோய்க்கும் நிவாரணம் உண்டு. நோய்க்குரிய நிவாரணம் சரியாக அமைந்துவிட்டால், வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்வின் அனுமதியால் குணம் ஏற்படும்'' (நூல்,முஸ்லிம். 4432) எல்லா நோய்க்கும் இறைவன் மருந்தை அருளியிருக்கின்றான் என்பதுடன் தேன், கருஞ்சீரகம், போன்ற நோய் நிவாரணி பற்றியும் நோய்க்கான நிவாரணம் இவ்வுலகிலே அருளப்பட்டுள்ளது என்பது பற்றியும் தெளிவாக குறிப்பிடுகின்றது. இவ்வேளை மனிதன் தனக்கு ஏற்படும் நோயின் போது அதற்கான சிகிச்சையை பெற்றுக் கொள்வதும் முக்கியமானதாகும். மேலும் நோயினை ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வதற்கான முன்னேற்பாடுகளையும் உணவு வகைகளை் குறித்தும், சுத்தத்தை ஈமானின் ஒரு பகுதியாகவும், உடல் நலம் பேணல், என்பது தொடக்கம் பல்துலக்குதல், மலசலகூட ஒழுக்கம் அனைத்திலும் மனித ஆரோக்கியத்திற்கான வழிகாட்டல்கள் அனைத்தையும் இஸ்லாம் வழங்கியுள்ளது.

இவ்வாறான வழிகாட்டல்களினாலும், கட்டளைகளினாலும் கவரப்பட்ட அரேபிய முஸ்லிம்கள் அதன் மீதான நாட்டத்தை அதிகப்படுத்திக் கொண்டார்கள். இந்தவகையில் இஸ்லாத்தின் தொடக்க காலம் மருத்துவத்தின் முதற்காலமாக காணப்பட்டது. இவர்களுடையகாலத்தில் இப்னு கல்தூன் என்பவர் பிரசித்தி பெற்ற மருத்துவராக காணப்பட்டார். ''நபியவர்களால் பரிந்துரைக்கப்பட்ட மருத்துவ பரிகாரங்கள் 'நபிகளார் (ஸல்) அவர்களின் மருத்துவம்' என்ற தலைப்பில் (அத்திப் அந்நபவி) ஹதீஸ் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.''(எம்.ஐ.எம். அமீன்) அதே நேரம் நபியவர்களின் காலத்தில் அல் ஹாரித் பின் ஹலதா என்பவர் கட்டுபாடான உணவுப் பழக்கங்களுடன் சிறந்த வைத்தியராக விளங்கினார். பின்னர் ராஜ்யங்களின் விருத்தியினால் கிரேக்கர்களின் அறிவுப்பாரம்பரியத்தை பெற்ற இவர்கள் யோசனையற்ற நினையில் அதனை ஏற்காமல், அல்குர்ஆனின் நிழலில் நின்று அதில் ஆராய்ச்சிகளை


ISBN 978-624-5736-14-0

மேற்கொண்டு விளக்கங்களை எழுதினார்கள், பிழைகளை கலைந்து புதிய நேய்களையும் அந்நோய்களுக்கான மருந்து வகைகளையும் கண்டறிந்து அது பற்றி பல்வேறுபட்ட நூல்களையும் எழுதினார்கள். கிரேக்க மொழியில் காணப்பட்ட நூல்களை அரபு மொழியிலும் இவர்களால் எழுதப்பட்ட நூல்களை பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்த்தார்கள். இவ்வாறு பல முயற்சிகளை மேற்கொண்டு அறிவியல் துறையின் பொற்காலமாக அப்பாஸியர்கள் காலம் காணப்பட்டதுடன் அதன் பின்னர் உலகெங்கும் இம்மருத்துவத்துறையை கொண்டு சேர்ப்பதில் பல்வேறு முஸ்லிம்களின் பங்களிப்புக்களும் சாதனைகளும் காரணமாக அமைந்துள்ளன. குறிப்பாக ஹுனைன் பின் இஸ்ஹாக் (806-73), அலீ அத்தபரி, அர்ராஷீ (865-925), அலீ அப்பாஸ் அல் மஜூஸி (?-994), அபுல் காஸிம் ஸஹ்ராவி (936-1013), அபூ அலி பின் ஸீனா (980-1037), அல் ஸஹ்ராவி போன்ற முஸ்லிம்களின் மருத்துவத்திற்கான சேவை அளப்பெரியது. இவர்களுடைய இப்பணி எவ்வாறு நவீன மருத்துவத்துறையின் வளர்ச்சிக்கு வகிபங்காக அமைந்துள்ளது என்பதை கண்டறிவதாக இவ்வாய்வு அமையபெற்றுள்ளதுடன் இவ்வாய்வுப் பிரச்சினையை நோக்குமிடத்து, இன்றைய காலத்தை பொருத்தவரையில் நவீன விஞ்ஞானம் மிக உயர்ந்த இடத்தை பிடித்துள்ளது. இது ஐரோப்பியர்களின் முயற்சியினாலும் அறிவார்ந்த செயற்பாடுகளினாலும் இந்நிலை தோற்றம் பெற்றுள்ளது என்ற கருத்துக்களும் எண்ணப்பாடுகளும் அனைவரிடத்திலும் பரவிக் காணப்படுகின்றன. இவை தொடர்பாக அறியாத முஸ்லிம்களின் மனோநிலையும் இதுவே! ஏனெனில் இன்று நவீன அறிவியல் வளர்ச்சிப்போக்கில் முஸ்லிம்களின் முயற்சியும் பங்களிப்பும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. காரணம் முஸ்லிம்கள் 'தக்லீத்' (போலச் செய்தல்,பழமை போற்றல்) இல் தங்கி சிந்தனை மழுங்கடிப்பட்டிருப்பதே ஆகும்.

மேலும் அறிவியல் எனும் போது அது மேற்கிற்கு சொந்தமான ஒன்றாகவும் முஸ்லிம்கள் அதற்காக எவ்வித பங்களிப்பும் வழங்கவில்லை என்ற குருகிய மனப்பார்வைகளும் உலகில் காணப்படுகின்றன. அதுமட்டுன்றி ஐரோப்பியர்கள் கிரேக்க நூல்களையும் அறி முதுசங்களையும் பெற்று அறிவில் முன்னேற்றம் அடைந்தார்கள் எனும் கூற்றில் அவர்கள் கிரேக்கர்களின் முதுசங்களை பெற்ற வரிசையில் மத்தியகாலத்தை விட்டுவிடுகிறார்கள். இன்று முஸ்லிம்கள் விஞ்ஞான வளர்ச்சிக்கு குறிப்பிட்ட அளவு பங்களிப்பு செய்கின்ற போதிலும்,ஐரோப்பியர்களின் இடைக்காலம் இருண்ட காலமாக காணப்பட்டதைத் தொடர்ந்து அவர்களின் விஞ்ஞான வளர்ச்சியின் பின்னணியில் இடைக்காலத்தில் 'goldern Age' என்று அழைக்கப்பட்ட முஸ்லிம்களின் பங்களிப்பு மிகையானது. இதில் மருத்துவத்துறை முக்கியமானதாகும். இதற்கு அதிகமான முஸ்லிம் அறிஞர்கள் பல்வேறுபட்ட பங்களிப்புச் செய்துள்ளார்கள்.

**ஆய்வு நோக்கம்:**

மத்தியகால முஸ்லிம் மருத்துவ அறிஞர்கள் நவீன கால மருத்துவ விஞ்ஞான வளர்ச்சிக்கு பங்களித்துள்ள விதம் பற்றி கண்டறிதல்

**பகுப்பாய்வு முறை:**

இவ்வாய்வின் நோக்கங்களைக் கண்டறிவதற்காக இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகள் என்பவை பயன்படுத்தப்பட்டு பண்பு முறையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கலந்துரையாடல்**

ஆரம்ப காலத்தில் மருத்துவத்தில் முன்னோடியாக காணப்பட்டவர் **ஹுனைன் பின் இஸ்ஹாக்,** இவர் அரேபிய மருத்துவத்திற்கு தொண்டாற்றியவர்களில் முக்கியமானவர். அப்பாஸிய ஆட்சியில் 'பைத்துல் ஹிக்மா' வில் இவர் பணிபுரிந்த போதுதான் இவரது அறிவியர் பணி ஆரம்பமாகத் தொடங்கியது. கலீபா மஃமுன் தன் ஆட்சியின் போது கிரேக்க மொழியிலிருந்த அனைத்து அறிவியல் நூல்களையும் அறபு மொழியில் பெயர்க்குமாறு இவருக்கு உத்தரவிட்டார். கிரேக்க, பாரசீகம், சிரியம், அறபு ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்த இவர் கிரேக்க மொழியில் எழுதப்பட்டிருந்த நூல்களைத்தேடிச் சென்றார். இவரால் மிக சிரமங்களோடு கண்டு பிடிக்கப்பட்ட அந்நூல்கள் யாவும் இவராலே மொழி பெயர்க்கப்பட்டது. ஓரிபாஸியஸ் எழுதிய 'திரட்டு' (Synopsis), ஏஜினாவைச் சேர்ந்த பவுல் எழுதிய 'ஏழு நூல்கள்' (Seven Books), தயஸ்கோரியஸ் எழுதிய 'மருத்துவ நூல்' (Meeria Medica), போன்ற நூல்களை மொழி பெயர்ப்பு செய்தது மட்டுமல்லாமல் மருத்துவம் பற்றி ஆராய்ந்து சொந்தமாக பல நூல்களை எழுதினார்; மருத்துவம் பயின்ற மாணவர்களுக்கு பயன்படும் வகையில் கலனின் குறிப்புக்களுக்கு சுருக்கங்களும் விளக்க உரைகளும் எழுதினார்.

இவர் எழுதிய நூல்களுள் 'கிதாபுல் அஸ்ர் மகாலாத் பில் அய்ன்' (கண் பற்றி பத்துக் கட்டுரைகள் நூல்) என்னும் நூல் மிகச்சிறப்பு வாய்ந்தது. கண்ணின் அமைப்பு பற்றிய வரிப்படங்களைக் கொண்ட இந்த நூலில் பல்வேறு வகையான கண் நோய்களுக்குரிய சிகிச்சை முறைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நூல் 1928இல் மாக்ஸ் மாயஹுப என்பவரால் ஆங்கில மொழிபெயர்ப்போடு கெய்ரோவில் முதன்முறையாக வெளியிடப்பட்டது கண்ணோயியல் சம்பந்தமாக இன்று கிடைக்கப்பெறும் மிகப் பழமையான நூல் இதுவாகும். (அபூபக்கர், 2001)

**அபுல் காஸிம் ஸஹ்றாவி (936-1013)** : ஸ்பெயினில் கோர்டோவுக்கு அண்மையாக உள்ள அஸ்ஸஹ்றா எனும் இடத்தில் கி.பி. 936இல் பிறந்துள்ளார். மத்திய காலத்தில் மருத்துவத்தை வளர்த்து அதனை உலகறியச் செய்தவர்களில் இவரும் ஒருவர். அபுல் காஸிம் கலப் பின் அப்பாஸ் அஸ்ஸஹ்றாவி என்பதே இவருடைய முழுப்பெயர். அபுல் காஸிஸ், அல்பு காஸிஸ் என்பது ஐரோப்பியர்களால் இவருக்கு வைக்கப்பட்ட பெயர்களாகும்.

ஸ்பெயினை ஆட்சி செய்த கலீபா இரண்டாம் ஹகமின் பிரத்தியேக மருத்துவராக பணிபுரிந்ததுடன் சத்திர சிகிச்சை மருத்துவராகவும் புகழ்பெற்றிருந்தார். மத்திய கால

முஸ்லிம்கள் உடலமைப்பியல் பற்றி ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை, ஏனெனில் இறந்த உடல்களை அழிப்பது காயப்படுத்துவது என்பன தடைசெய்யப்பட்டதாக காணப்பட்டமையே ஆகும். ஆனால் ஸஹ்ராவி முதன் முதலாக ஸஹ்ராவி உடலமைப்பியல் பற்றிய ஆய்வுக்கு மனித குரங்குகளைப் பயன்படுத்தி சத்திர சிகிச்சையில் பல புதிய சிகிச்சை முறைகளை கண்டுபிடித்தார். இவருடைய நூல்களும் கண்டுபிடிப்புக்களும் இடைக்கால மருத்துவ விஞ்ஞானத்திற்கு பெரிதும் பங்காற்றியுள்ளன.

இவர் எழுதிய நூல்களுள் 'கிதாப் அத்தஸ்ரிப் லிமன் அ∴ஜத அன் அத்தஉலிப்' எனும் மிகப் பிரசித்தமான முப்பது தலைப்புக்களின் கீழ் எழுதப்பட்டுள்ள இந்நூலின் முதலில் உடற்கூறுகள் பற்றியும் மனித உடல் பற்றியும் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. (அமீன்.எம்.ஐ.எம்,) மேலும் முதல் அத்தியாயம் சுடுதல் (Cauterization) பற்றியும், இரண்டாம் அத்தியாயம் ஆய்கத்தி (scalpel) தொடர்பாகவும், மூன்றாம் அத்தியாயத்தில் எலும்பு முறிவு, மூட்டு இடப்பெயர்வுகள், பிரசவம் பற்றியும் கூறுகின்றது. சத்திர வைத்தியம் பற்றிய பகுதியில் காயங்களை சுடுதல், சிறுநீரகக் கற்களை சிறுநீரகப் பையினுள் நொறுக்குதல் பரிசோதனை நோக்கங்களுக்காக உயிருடன் நோண்டல், வெட்டி சோதித்தல் (dissection) முதலியவை பற்றியும் விரிவாக விளக்கி கருத்துக்களை அறிமுகப்படுத்தி இருக்கிறார்.இப்பகுதி ஜெராரட் என்பவரால் இலத்தினில் மொழி பெயர்க்கப்பட்டதைத் தொடர்ந்து 1497இல் வெனிஸ் நகரிலும் 1541இல் பேஸ்ஸிலும் 1778இல் ஆக்ஸ்போட் நகரிலுமாக இதன் பதிப்புக்கள் வெளியிடப்பட்டன. (அபூபக்கர்,2001) இவரது இந்நூல் மருத்துவர்களுக்கு மட்டுமல்லாது ஐரோப்பாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் அறுவை சிகிச்சை பற்றிய நிலையான பாடப்புத்தகமாக ஐந்த நூற்றாண்டு பயன்படுத்தப்பட்டது. மேலும் சிசேரியன் போன்ற பாரிய அறுவை சிகிச்சைகளையும் அவர் நிறைவேற்றினார். காயங்களைத் தைக்க பட்டு நூலைப் பயன்படுத்திய முதல் மருத்துவ நபராகவும் இவர் காணப்படுகின்றார் (Yasmeen Mahnaz Faruqi, 2006).

ஐரோப்பாவின் அதாவது நவீன மருத்துவ விஞ்ஞானத்தில் சத்திர சிகிச்சைக்கு அடித்தளம் அமைத்தவராக அஸ்ஸஹ்ராவி போற்றப்படுகிறார். அவருடை மருத்துவ பெருநூலின் 'அத்ஹான்' (களிம்புகள்) எனும் பகுதியை ஹமர்னஹ், சொன்னிடெக்கர் என்பவர்கள் சேர்ந்து எழுதிய நூலில் மொழி பெயர்த்துள்ளனர். இந்நூல் லேடன் நகரிலும் வெளிவந்துள்ளது (அபூபக்கர்,2001). இவர் தனது நூலில் 200க்கு மேற்பட்ட சத்திர சிகிச்சை கருவிகளின் வரைபடங்களை தந்துள்ளார். மேலும் பழுதடைந்த பற்களை நிரப்புவதிலும் கழற்றுவதிலும் கை தேர்ந்தவராக காணப்பட்டார். அதற்கு தேவையான உபகரணங்களை அறிமுகப்படுத்தியதோடு நோவு விளங்காமல் இருப்பதற்காக மருந்துகளையும் பயன்படுத்தினார் இன்றைய காலங்களிலும் பற்களை கலட்டுவதற்கு முதற்பாடு அதன் நோவினை நோயாளி அறியாதிருப்பதற்காக ஊசி மருந்து இயற்றப்படுகின்றது. இதற்கான முன்னோடியாக ஸஹ்ராவி காணப்பட்டுள்ளார்''(எம்.ஐ.எம். அமீன்).

**அபூ அலி பின் ஸீனா (980-1037)** மத்திய கால மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியின் உச்சத்திற்கு காரணமாக அமைந்தவர் அவிசென்னா என இலத்தீன் மொழியால்

அழைக்கப்படும் அபூஅலீ பின் ஸீனா என்பவராவார். சிறிய வயதில் சட்டம், சூபித்துவம், அறிவியல் கலைகள் அனைத்தையும் கற்று பாண்டித்தியம் பெற்றார். இப்னு ஸீனா தனது பதினேழாம் வயதிலே திறமை வாய்த்த மருத்துவராக நாடெங்கும் புகழ்பெற்றிருந்தார்.

ஸாமானிய சுல்தான் திடிரென நோயுற்று குணப்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட போது அவரை வியப்பூட்டும் வகையில் குணப்படுத்தியதால் சுல்தானின் நூல் நிலையத்தை பயன்படுத்திக் கொள்ள ஸீனாவுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனால் பல நூல்களைப் படித்து தன் அறிவை பெருக்கி மருத்துவத் துறையில் பல நூல்களை எழுதினார். புரோக்கல்மேன், இவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை தொண்ணூற்றொன்பது என்று குறிப்பிடுகின்றார் (அபூபக்கர், 2001). அந்தவகையில் ஸீனா பல பெரும் நூல்களையும் சிறுநூல்களையும் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய நூல்களில் ‘அல் கானூன் பித்திப்’ (மருத்துவ விதிகள்) என்னும் நூல் ஐரோப்பியர் இடையே பெரும் செல்வாக்குப் பெற்று காணப்படுகின்றது. ‘இது 700 ஆண்டுகளுக்கும் மேலாக ஐரோப்பாவில் ஒரு பொதுவான பாடப்புத்தகமாக புகழ்பெற்றிருந்ததாகவும் கிழக்கில் இன்னும் சீனாவினுடைய முயற்சிகள் பற்றி ஆராயப்படுவதாகவும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. (Mohammed Adil Afridi, 2016). இந்நூல் ஐந்து பாகங்களைக் கொண்டுள்ளது. அதில் உடல் நீர்கள், உடலமைப்பியல், நோய், நோய்க்காரணிகள், அவற்றின் அறிகுறிகள், வேறு பிரித்தறிதல் (Diagnosis), முன்னறிதல் (prognosis), சிகிச்சை முதலியவை பற்றியும் நோய் தடுப்பு முறைகள், மருந்துகளின் தயாரிப்பு பற்றி விளக்கும் சூத்திர நிகண்டு (Formulary) போன்றவற்றை விளக்கியிருக்கிறார்.

மேலும் நோய்கள் தொற்றின் மூலமும் பரம்பரை, இனம், பிரதேசம் ஆகியவற்றின் காரணமாக பரவுகின்றதாக கூறுவதுடன் நுரையீரல் அழற்சி, செங்கண்மாரி, தோல நோய்கள், ஆண்-பெண் பாலுறுப்புக்களில் ஏற்படும் நோய்கள், நரம்பு நோய்கள் முதலான அண்மைக்கால மருத்துவ மேதைகளின் தீவிர கவனத்தை பெற்றுள்ள நோய்கள் பற்றியும் நோய்கள் பரவும் விதம், நோய்களை பிரித்தறிதல் முதலானவற்றை மிகச் சரியாக விளக்கியிருக்கிறார். ‘கி.பி 12ஆம் நூற்றாண்டில் இந்நூல் ஜெராட் என்பவரால் லத்தின் மொழியில் பெயர்க்கப்பட்டதைத் தொடர்ந்து பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி முப்பது ஆண்டுகளில் மட்டும் லத்தின் மொழியில் பதினைந்து பதிப்புக்களை கண்டமையானது’ (philip K.Hitti,1970) மத்திய கால முஸ்லிம்களினுடைய மருத்துவம் நவீனத்தை நோக்கி விரைவாக நகர்ந்துள்ளமையை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இந்நூல் ‘16ஆம் நூற்றாண்டில் 20 மேலாக லத்தின் மொழியில் பதிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன’(philip,1970). இதன் ஐந்தாம் பாகம் 1902இல் லீப்ஸிக் நகரிலும் 1845இல் பிரேக் நகரிலும் 1593இல் உரோமிலும், 1874இல் கெய்ரோ போன்ற நகர்களிலும் உருது (கபிருத்தீன் 1930, ரிழ்வான் அஹ்மத் 1645), ஆங்கிலம் (கமொரன் குருனார் 1930), உஸ்பெக், ரஷ்யன் (குலாம் குஸன் ஹன்தூரி 1930) போன்ற மொழிகளில் பெயர்த்து வெளியிட்டார்கள். பலர் இந்நூலுக்கு விரிவுரைகளை எழுதியுள்ளனர்.


ISBN 978-624-5736-14-0

மாக்ஸ் மேயர் ஹோப் என்பவர் இந்நூல் பற்றி குறிப்பிடுகையில் உலகின் எந்த மருத்துவ நூலும் இதனைப் போல அவ்வளவு அதிகமாக வாசிக்கபடவில்லை' (அபூபக்கர், 2012). மேலும் அறிவியலின் பரிணாமம் என்ற புத்தகத்தை எழுதிய டாக்டர் வில்லியம் ஆஸ்லர் 'மருத்துவத்துறையில் நீண்டகாலமாக கானுன் ஒரு மருத்துவ பைபிளாக இருந்து வருகின்றது' (Mohammed Adil Afridi, 2013) என்கிறார்

இதனைத் தொடர்ந்து அலி ஸீனாவுடைய இன்னுமோர் முக்கிய நூலாக 'கிதாப் அஷ்ஷிபா (குணப்படுத்தும் புத்தகம்) விளங்குகின்றது. தத்துவம் சார்ந்த இந்நூல் பல அறிவியல் விடயங்களையும் முன்வைக்கின்றது (philip,1970) மேலும் அல் உர்ஜுஷாஹ் பித் திப் (மருத்துவ கவிதை), அத்வியதுல் கல்பியா (இருதய மருந்துகள்),ஹுதூத் திப் (மருத்துவத்தின் வரைவிலக்கணங்கள்) போன்ற சிறு நூல்களையும் எழுதியுள்ளார். இவர் பாரசீக அறிஞராக இருப்பினும் இவருடைய ஓரிரு ஆக்கங்கள் தவிர்ந்து ஏனையவை அரபு மொழிலே எழுதப்பட்டுள்ளது. ஏனெனில் மத்தியகால அறிவின் மொழியாக அறபு காணப்பட்டது. இது குறித்து 'நாகரீகத்தின் உந்து சக்தியாக இஸ்லாமிய நம்பிக்கை காணப்பட்டது அதன் மொழியாக அறபு விளங்குகிறது' (Yasmeen Mahnaz Faruqi, 2006)

தொற்றுநொய்க் கொள்கையை முறையாக மருத்துவ உலகிற்கு நெறிப்படுத்திக் கூறிய பெருமை அலீ ஸீனாவையே சாரும். இவரது படைப்புக்கள் பித்திசிஸ் மற்றும் காசநோய் பற்றியும் விளக்குகின்றது. மேலும் நீராலும் மண்ணாலும் நோய்கள் பரவுவதாகவும் மூளைக்காய்ச்சல், உடற்கூறியல், பெண்ணோயியல் மற்றும் குழந்தை ஆரோக்கியம் குறித்த நோய்களுக்கான சிகிச்சையையும் தயாரித்த முதலாமவர் அலீ ஸீனாவே. (Mohammed Adil Afridi,2013)

அதுமட்டுமன்றி மூச்சு குழற்றொடுவைப் பிளந்து குழாய் செலுத்தி சிகிச்சை செய்யும் முறையை (Tracheotomy) மிருகங்களின் தோல்களாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட புகுத்தியைப் (syring) பயன்படுத்தி உடம்பினுள் மருந்துகள் செலுத்தும் முறை என்பவற்றை முதலில் அறிமுகப்படுத்திய மருத்துவர் இவராவார். இன்னும் பிரசவ வேளையில் சத்திர சிகிச்சை அளிக்கவும் கடின பிரவத்தின் போது, யோனி மடலினூடாகக் கையை நுழைத்து சிசுவை ஒழுங்கான நிலைக்கு திருப்பிவிடும் (Internal Version) முறையையும் வயிற்றையும் கருப்பையையும் பிளந்து குழந்தையை எடுக்கும் (Caesarian Section) முறையையும் இவர் அறிந்து வைத்திருந்தார். மேலும் இவர் கண்ணேயாயியல் பற்றியும் போதியரு பரிச்சயமுடையவராக காணப்பட்டார். இவரை பொருத்தவரையில் மத்திய கால மருத்துவத்திற்கு அரும்பணி ஆற்றியதோடு 'நவீன மருத்துவத்தின் தந்தை' (Father of Modern Medicine) என ஐரோப்பியர்களால் அழைக்கப்படுகிறார். (philip,1970)

**அர்ராஸி 865-925**: ஐரோப்பியர்களால் ரஸேல் என அடையாளம் காணப்பட்ட அபு பக்கர் முஹம்மது இபின் ஜகரிய்யா அல்-ராஸி முஸ்லிம் மருத்துவர்களில் ஒருவராகவும் இப்னு சீனாவுக்கு அடுத்தபடியாக அவரது முயற்சிகளில் இரண்டாவது நபராகவும் மருத்துவ


ISBN 978-624-5736-14-0

துறையில் விளங்குகின்றார். ஈரானில் ராய் எனும் ஊரில் பிறந்தார். ஆரம்பத்தில் இசைத்துறையில் ஆர்வம் காட்டிய இவர் கீமியா எனும் இரசவாத துறையினால் கவரப்பட்டு இசைத்துறையை கைவிட்டார். இரசவாத்தினால் ஏற்படும் கண்ணோய்க்கு மருந்து தேடி அலையலானார். பக்தாதில் இவர் பிரதம வைத்திய அதிகாரியாக கடமையாற்றியதுடன் மருத்துவ மாணவர்களை உருவாக்குவதிலும் பங்கு கொண்டார்.

பரிசோதனை முறை விஞ்ஞானத்தில் பெரும் அறிவையும் அனுபவத்தையும் பெற்றிருந்தார். இவர் கிதாப் அல்-மன்சூரி உட்பட 200க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். (Mohammed Adil Afridi, 2013) அல் பிரூனி, ராஸி எழுதிய 184 நூல்களின் பட்டியலை தந்திருக்கிறார். அதில் 56 நூல்கள் மருத்துவம் சார்ந்தவை என்று குறிப்பிடுகிறார் (அபூபக்கர், 2012). மருத்துவ நூல்களுள் 'அல் ஹாவி','கிதாபுல் பக்ரீ','கிதாபுல் மன்ஸுரி', ஜுதரி வல்ஹஸ்பா','தக்ஸீமல் இலல்', ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இந்நூல்களில் மிகப்பெரியவை அல் ஹாவீ (விரிவானது) என்பதற்கும். இதனைப் போன்ற ஒரு பெரிய மருத்துவ நூல் உலகிலே அண்மைக்காலம் வரை எழுதப்படவில்லை என்று கருதப்படுகின்றது. இந்நூல் சுமார் முப்பது பாகங்களைக் கொண்டது என்று இப்னு கல்லிகான் கூறுகின்றார். மிக முக்கியமான நூலாக இது காணப்பட்ட போதிலும் 1963இல் இந்தியாவில் தான் முதன் முதலாக வெளியிடப்பட்டது. இவர் தனது நூலில் ஒவ்வொரு நோயையும் பற்றி தமது சொந்த பிணி ஆய்வு அவதானங்களையும் (cinical observations) விளக்கியிருக்கிறார்.

தலை முதல் பாதம் வரை உடலிலே தோன்றும் நோய்கள் அவற்றின் உடனலம், மருத்துவ உணவு முறைச்சிகிச்சைகள், அறிகுறிகள் முதலியவை பற்றிய முழுமையான விவரங்களைக் கொண்டுள்ள இந்த நூலில் அல் ராஸி உடலமைப்பியல் பற்றியோ சத்திர வைத்தியம் பற்றியோ ஒன்று குறிப்பிடவில்லை. மருத்துவ களைக்களஞ்சியமாக கருதப்படும் இந்நூல் முதன் முதலில் 1279ஆம் ஆண்டு யூத மருத்தவரான பரஜ் பின் ஸாலிம் என்பவால் 'கண்டினென்ஸ்' என்ற பெயரில் லத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. 1486இல் பிரசுரிக்கப்பட்ட இந்த மொழிபெயர்ப்பு பல தடவைகள் பிரசுரிக்கப்பட்டு 1542இல் வெனிசு நகரத்தில் ஐந்தாவது படைப்பாக வெளியிடப்பட்டது. மேலும் இந்நூலின் பிணி ஆய்வுக் குறிப்புகள் சிலவற்றை ஈ.ஜி. பிரவ்னி என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இருக்கிறார்.

இவர் எழுதிய சிறிய மருத்துவ நூல்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது 'அல்-ஜுதரி வல் ஹஸ்பா'(சின்னமுத்தும் பெரியம்மையும்) என்பதாகும். இதில் சுன்னமுத்து பெரியம்மைகளை விளக்கி இரண்டிற்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை தெளிவாக கூறுகிறார்.இந்நோய்கள் பற்றி மருத்துவ உலகில் முதலாவது எழுதப்பட்ட நூல் இதுவே ஆகும். 'இடைவிடாத காய்ச்சல், முதுகு வலி, நாசி அரிப்பு தூக்கத்தில் நடுக்கம், ஆகிய அறிகுறிகளோடு பெரியம்மையும் இதனோடு சேர்த்து முகத்தில் குருதி தேங்குதல், முகம் சுருங்கிக் கொள்ளுதல், உடம்பெங்கும் கொட்டும் வலி, கண்கள் கடுமையாக சிவந்து போதல், தசைகளில் ஊரும் உணர்வு, தொண்டையிலும் மார்பிலும் நோவு, சுவாசிக்க முடியாமை, இருமல், தடிப்பான உமிழ் நீர்ச் சுரப்பு போன்ற அறிகுறிகளுடன் சின்னமுத்தும் வெளிப்படுவதாக தெரிவிக்கிறார். இன்று இவ்வறிகளுடன் அறிகுறிகளுடன் காணப்படும் நோய்

‘சிக்கன் பொக்ஸ்’(அம்மை) என அழைக்கப்படுகின்றது. ‘அறேபியரின் மருத்துவத்திற்கு அணிகலாக கருதப்படும்’(Philip,1970) இந்நூல் முதலில் ஜீவல்லா என்பவரால் லத்தின் மொழியில் பெயர்க்கப்பட்டு 1498இல் வெனிசுலா நகரில் வெளியிடப்பட்டது. மேலும் கிரேக்க பெயர்க்கப்பட்டு (ஐக்கியுஸ் கோபில்-1548) பரிஸ் நகரிலும் (1763), பிரெஞ்ச மொழியில் பெயர்க்கப்பட்டு (ஐக்கியுஸ் பவுலட்) அதே நகரிலும் (1848), அங்கிலத்தில் பெயர்க்கப்பட்டு (வில்லியம் கிரின் ஹில்) லண்டனிலும் (1911), ஜெர்மன் மொழியில் பெயர்க்கப்பட்டு (கார்ஸ் ஒப்பிட்டிஸ்) லிப்சிக் நகரிலும் வெயியிடப்பட்டது (அபூபக்கர், 2012) இம்மொழிபெயர்ப்புக்களையும் அவற்றினூடான வெளியீடுகளையும் நோக்குகின்ற போது இன்று மருத்துவதத்தில் ஆராயப்படுவதற்கும் அறிவதற்கும் முஸ்லிம் இடம் வைக்கவில்லை என்பது தெளிவாக அறியப்படுகின்றது. இந்நூல்கள் ஐரோப்பிய உலகத்தில் மருத்துவ துறையில் பாரிய தாக்கத்தை நவீன உலகில் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

மருத்துவ நூல்கள் மட்டுமன்றி பிரயோக மருத்துவத்திலும் அதிக ஈடுபாடு காட்டியுள்ளார். ‘கதாப் அல் மன்ஜுரியில் முள்ளந்தண்டு எண்பினையும் முண்ணானையும் பற்றிவிளக்குகிறார். தலையோட்டின் அடிப்பாகத்தில் சிறிய துளைகள் பாணப்படுவதாகவும் அவற்றினூடாக நாடிகளும் நாளங்களும் செல்வதாக கூறுகிறார். மூளையிலிருந்து செல்லும் அலைய நரம்பு பற்றியும் கூறும் இவர் அவை மூச்சுக் குழற்றொடுவையில் கிளைகளாக பிரிந்து செல்கின்றது என்றும் சில சமயங்களில் இந்நரம்பு வலது பக்கத்தில் இரட்டையாக காணப்படுவதாகவும் பிறப்புக்கோளாறு என்றும் கூறுகிறார். 29(57) மதுரசத்தை முதன் முதலாக மருத்துவ நோக்கங்களுக்காக பயன்படுத்தியவரும், கண்ணோய்க்கு சத்திர சிகிச்சை செய்யும் முறை பற்றியும், சத்திர சிகிச்சையின் போது ஒரு வித நூற்கண்டை (seton) கண்டுபிடித்தவரும் இவரே. இவருடைய மருத்துவத்திற்கான உழைப்பும் முயற்சியும் இன்றைய நவீன உலகில் மேற்குலகின் கையில் கிடைத்த நூல்களினால் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

**இப்னு அல் நபீஸ் (1210-1288):** மத்திய கால மருத்துவத்துறையில் போனவர்களில் அல்நபீஸும் குறிப்பிடத்தக்கவர். திமிஸ்கில் பிறந்து அங்கேயே ஆரம்பக்கல்வி, இஸ்லாமிய சட்டம், அளவைவியல், தத்துவம்என்பவற்றை கற்றார். இப்னு அல் தக்வாரிடம் மருத்துவத்துறையில் தேர்ச்சி பெற்றார். ஸலாஹுத்தினால் அமைக்கப்பட்ட (1171) மருத்துவமனையில் நீண்ட காலம் மருத்துவ அதிகாரியாக கடமையாற்றினார். இவர் மருத்துவம் மட்டுமன்றி ஏனைய துறைகள் சார்ந்தும்பல நூல்களை எழுதியுள்ளார். அவர் எழுதியமருத்துவ நூல்களில் மிகப்பெரிய நூலாக ‘கிதாபுல் ஷாமில் பிஸ் ஸீனா அதித் திப்பிய்யா என்பதாகும். மருத்துவம் தொடர்பான அனைத்து மூலங்களையும் கொண்டு எழுதப்பட்ட இந்தநூல் சத்திர வைத்தியம் பற்றியும் குறிப்பிடுகின்றது.

துனி நூல்களையும் தாண்டி ஹிப்போகிரடீஸ், பின் இஸ்ஹாக், அபூ அலி ஸீனா ஆகியோரின் மருத்துவ நூலுக்கு விரிவுரைகளையும் எழுதியுள்ளார். அவ்வாறு எழுதிய நூல்களுள் ‘ஷர்ஹ் புஸுல் அபுக்ராத்’,‘ஷர்ஹ் லி மபாதிஉ அபுக்ராத்’,‘ஷர்ஹ் லி கிதாப் மஸா இல் பித் திப்ப’ ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. ‘ஷர்ஹ் லி மபாதிஉ அபுக்ராத்’ என்னும் நூல் 1881இல் பாரிஸ் நகரில் அச்சிடப்பட்டு வெளியடப்பட்டது (அபூபக்கர், 2012). கெலன் முன்வைத்த இரத்த


ISBN 978-624-5736-14-0

ஓட்டக் கொள்கையை பிழை கண்டு அதில் முரண்பட்டவர் இதயத்தின், நுரையீரலின் பகுதிகளுக்கிடையே இரத்த ஓட்டம், நுரயீரல் சுழற்சி அல்லது குறைந்த சுழற்சி என்ற கோட்பாட்டை அல் கானுன் அல் பித்திப் எனும் விளக்க நூலில் முன்வைத்தார். இது 1547இல் லத்தின் மொழியில் பெயர்க்கப்பட்டது. (Yasmeen Mahnaz Faruqi, 2006)

நவீன மருத்துவர் செர்வீற்றஸ் இது பற்றி குறிப்பிடும் முன்னரே இப்னு நபீஸ் குரதி ஓட்டத்தைப்பற்றி மிகத்துல்லியமாக தெரிவித்திருப்பதானது மத்தியகால முஸ்லிம்களினுடைய மருத்துவம் எவ்வித சந்தேகமுமின்றி நவீன விஞ்ஞானத்திற்கு ஏதோ ஒரு வகையில் உறுதுணையாக அமைந்துள்ளது. அதன் வழிநின்றுதான் இன்றைய மருத்துவ விஞ்ஞானம் வளர்ச்சியடைந்துள்ளது.

இதனைப் பற்றி மார்க்ஸ்மேயர்: "இப்னு நபீஸ், வில்லியம் ஹார்வியின் முன்னோடிகளுள் தரத்திலும் காலத்திலும் முதல்வராக இருந்தார் மைக்கல் செர்வீற்றஸ்க்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே குருதியின் நுரையீரல் சுற்றோட்டத்தை விளக்கியுள்ளார். இது கொலம்பஸ், செர்வீற்றஸ் என்போரை எவ்வாறு அடைந்தது என்று தெரியவில்லை இருப்பினும், இத்தாலியிலுள்ள பெல்லுனொ (Belluno) எனும் இடத்தைச் சேர்ந்த அன்திரியா அல்பகோ (Andrea Alpago) என்வர் (1450-1520) மூலம் அவர்களை எட்டியிருக்கலாம் எனப்படுகின்றது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் இத்தாலியில் (2013 டிசம்பர் 25) வெளியிடப்பட்ட **'The Physician'** எனும் திரைப்படம் அமைந்துள்ளது. இதில் கதாநாயகனாக காணப்படும் ஒருவர் ஐரோப்பாவிலிருந்து தாய்க்கு மருந்து தேடி இறுதியில் தாய் இறந்த நிலையில் மருத்துவத்தை சரியாக அறிந்து கொள்ள ஐரோப்பாவில் இருந்து மத்திய நாடுகள் நோக்கி மிக நீண்ட நாட்களாக பயணம் செய்த அங்கு அந்நியர் என்பதை காட்டிக்கொள்ளமல் இருப்பதற்காக விருத்தசேதனம் செய்வதாகவும் அவர் சென்ற இடம் விஞ்ஞானத்துறையில் வளர்ச்சி அடைந்து காணப்பட்டதாகவும் அங்கு அந்த அனைத்தையும் கற்று தேர்ந்தவரானார் என்று அத்திரைப்படம் எடுத்துக்காட்டுகின்றது.

இவர்கள் தாண்டி இன்னும் பல அறிஞர்கள் மருத்துவத்தில் பங்காற்றியுள்ளார்கள். இப்னு காதிமா, அல் மஜூஸி, அலி பின் ரிழ்வான், இப்னு ஜஷ்லா, ஸஈத் பின் ஹிபத்துல்லாஹ், இப்னு ஜுஹ்ர் (1091-1162), இப்னு ருஷ்த் (1126-1198), இப்னு ஹுபல் (1117-1213), இப்னு அல்தீமித் (1075-1165) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். **இப்னு ருஷ்த்** மருத்துரையின் மேதையாக காணப்படுகின்றார். இவர் மருத்துறைசார்ந்து எழுதிய நூல்கள் பதினாறாகும். கிதாபுல் குல்லியாத் (மருத்துவத்தில் பொதுத் தன்மைகள்) என்னும் **பெயரி**ல் ஏழு பகுதிகளைக் கொண்டு எழுதப்பட்ட நூலில் உடலமைப்பு, உடற்**றொழலில்** மற்றும் நோயியல், நோய்களைப் பிரித்தறியும் கலை, மருந்துநூல், உடனலவியல் மற்றும் சிகிச்சைகள் பற்றியும், விளக்கியுள்ளார். 'இது போன்ற காத்திரமான நூலை கிரேக்க மருத்துவ மேதைகள் கூட எழுதவில்லை என ஐரோப்பியர்கள் கூறுகின்றனர். இது 149இல் வெனிசுலா நகரில் அச்சிடப்பட்டது முதல் பதினேழாம் நூற்றாண்டில், ஐரோப்பாவில் இருந்த பல்கலைக்கழகங்களில் பிரதான மருத்துவ பாட நூலாக பயன்படுத்தப்பட்டுள்ளது. **அபு'முஹம்மது பின் அல்-பைதார்** ஸ்பெயினில் இருந்த மிக முக்கியமான முஸ்லிம்

விஞ்ஞானிகளில் ஒருவராகவும், இடைக்காலத்தின் தலைமை தாவரவியலாளர்களாகவும் மற்றும் மருந்தாளர்களில் ஒருவராகவும் இருந்தார்'(Yasmeen Mahnaz Faruqi, 2006). **அல் மஜுஸி:முஹம்மத் அல் ஷகூரி (1326-?),** இப்னு காதிமா (1323-1369) போன்றோர்கள் பிளேக் எனும் தொற்று நோய் பற்றி விபரித்துள்ளார்கள். இப்னு காதிமா அதன் பொதுத் தன்மைகள், நோயின் காரணங்கள்,நோய் பரவும் விதம், அறிகுறிகள் தடுப்பு முறைகள், சிகிச்சைகள் முதலியவை பற்றி விரிவாக விளக்கியிருக்கிறார். '**முஹம்மத் அல் ஷப்ரா**': புகழ்பெற்ற சத்திர வைத்திய நிபுணராகவும் மூலிகையாளராகவும் விளங்கிய இவர் சத்திர வைத்தியம் தொடர்பாக 'கிதாபுல் இஸ்திக்ஸா வல் இப்றாம் பி இலாஜில் ஜிராஹாத் வல் அவ்ராம்' (காயங்களினதும், கட்டிகளினதும் சிகிச்சை பற்றிய ஆழமும், இறுக்கமும் வாய்ந்த நூல்) எனும் நூலை எழுதியுள்ளார். மூன்று பகுதிகளைக் கொண்ட இந்நூலில் கட்டிகள், அழற்சிகள், அதன் காரணங்கள், அறிகுறிகள், சிகிச்சைகள், காயங்கள், உடலில் பாய்ந்த அம்புகளை வெளியேற்றும் முறைகள், உடைந்த எலும்புகளையும் மூட்டிடப்பெயர்வுகளையும் சரி செய்தல், மற்றும் சத்திர வைத்தியத்தில் பயன்படும் எளிய சேர்வை மருந்துகள் பற்றியும் விவரிக்கின்றார். இந்நூல் இதுவரை வெளியிடப்படாத நிலையில் இதன் கையெழுத்து பிரதிகள் பெஸ் நகரிலுள்ள அல்கரவிய்யீன் நூல் நிலயத்திலும் மொரோக்கோவில் உள்ளவேறு நூல் நிலயங்களிலும் இன்றும் இருந்து வருகின்றன. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நஜிபுத்தீன் மருத்துவம் தொடர்பாக 'அல்கராபாதின் அலாதர்தீப் அல் இலல் (நோய்களின் ஒழுங்கில் மருந்து சூத்திர நிகண்டு),'உஸுல் தர்கிபுல் அத்விய்யா' எழுதிய நூல்களில் பிரைற்றின் நோய் (Briight's Disease) என இக்காலத்தில் அழைக்கப்படும் ஒரு வகை சிறுநீரக நோயை முதன்முதலில் கண்டறிந்தார். இவருக்கு பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே டாக்டர் ரிச்சார்ட் (1789-1858) என்பவர் இந்நோய் பற்றி கருத்துவெளியிட்டார்.

மேலும் முஸ்லிம் மருத்துவர்கள் இன்று கையாளப்படும் மருந்து உத்திகளை கண்டுபிடித்து வழங்கியுள்ளார்கள். அந்தவகையில் கிருமிபுகுத்தல் (Inoculation) என்று அழைக்கப்படும் அம்மை குத்தும் (Vaccination) முறையை 1679இல் துருக்கிய முஸ்லிம்களே முதன் முதலில் கண்டுபிடித்தார்கள். தற்காலத்தில் ஊசி குத்தும் முறைதான் சிகிச்சை அளிப்பதில் முக்கியமானதாக காணப்படுகின்றது. பாரிய நோய்களுக்கும், உடனடி நிவாரணம் வேண்டியும் இம்முறையையே பின்பற்றுகின்றனர். இன்னும் நஞ்சு உட்கொண்ட ஒருவருக்கு சிகிச்சை அளிப்பதற்கு முன்னால் அவரது இரைப்பையை இரைப்பை குழாய் மூலம் கழுவும் முறையையும் கண்களில் உண்டாகும் கட்காசம் (Cataract), கண்வில்லைகளின் ஒளிபுகாவியல்பு (o**pacity**) காரணமாகவே ஏற்படுகின்றது என்பதையும் அறபு மருத்துவர்களே முதலில் அறிந்து வைத்திருந்தனர். (அபூபக்கர், 2012)

அதுமட்டுன்றி மத்தியகால முஸ்லிம்கள் இன்று காணப்படும் மருத்துவமனைகளை விடவும் பல தொழில்நுட்பங்கள் கொண்டு மருத்துவமனைகளை நிறுவினர் இவை வெறும் மருத்துவ மனைகளாக மட்டுமன்றி மருத்துவ கல்லூரிகளாகவும், ஆய்வு கூடங்களாகவும், நூல் நிலயங்களாகவும் காணப்பட்டுள்ளன. இது பற்றி பல ஆய்வுகள் குறிப்பிடுகளும் குறிப்பிடுகின்றன: 'முஸ்லிம்கள் தங்கள் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை அறிவைப்

பயன்படுத்தி பல மருத்துவமனைகளை நிறுவினர். இவை அக்காலத்தில் மிகவும் உயர்ந்தவையாக இருந்தன. இதே காலத்தில் ஐரோப்பிய மருத்துமனைகள் மதங்களுடனும் மடாலயங்களுடனும் இணைந்து காணப்பட்டன. இஸ்லாம் உலகில் எட்டாம் நூற்றாண்டில் முதல் மருத்துவமனை டமஸ்கஸில் கட்டப்பட்டுள்ளது’(Yasmeen Mahnaz Farfuqi, 2006). மேலும் மனநோயாளர்களுக்காகவும், இராணுவ, சிறைச்சாலை என தனித்தனி வைத்தியசாலைகளும், நகர்புற, நடமாடும் வைத்திய சாலைகளும், மகளிர் வைத்தியசாலைகளும் உருவாக்கப்பட்டன”(எம்.ஐ.எம். அமீன்).

**கண்டுபிடிப்புக்கள்:**

- மத்திய கால முஸ்லிம்களின் மருத்துவ அறிவியல் வளரச்சியில் அல்குர்ஆன், சுன்னாவின் பங்கு மிக முக்கியமானது.

- கிரேக்கால அறிவு முதுசெங்களை அறேபிய முஸ்லிம்கள் மூடர்களாக பின்பற்றவிலை. மாறாக அதில் ஆய்வுகளை மேற்கொண்டு பிழையானவற்றை அகற்றி அனுபவ முறையில் ஏற்று விளக்கவுரைகளையும் எழுதி விருத்தி செய்துள்ளார்கள்.

- முஸ்லிம் மருத்துவர்கள் நூல்கள் மட்டுன்றி பல நோய்களையும் அதற்கான சிகிச்சை முறைகளையும் கண்டறிந்துள்ளார்கள்.

- மருத்துவத்துறையில் பல்வேறுபட்ட சத்திர சிகிச்சை முறைகளையும் அதற்கான கருவிகளையும் கண்டுபிடித்துள்ளார்கள். அவை இன்றைய கால மருத்துவ கருவிகள் போன்றும் சிகிச்சைகள் போலும் காணப்படுகின்றது.

- இவர்களுடைய மருத்துவ நூல்கள் கண்டு பிடிப்புக்கள் அனைத்தும் ஐரோப்பியர்களால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு அவர்களுடைய பல்கலைக்கழங்களில் பாட நூலாகவும், நூல் நிலையங்களிலும் இன்றும் காணப்படுகின்றன.

- மத்திய கால முஸ்லிம்கள் இன்றைய காலத்தை போல அல்லாது பல சொகுசுகளுடனும் சலுகைகளுடனும் தொழில்ட்பத்துடனும் மருத்துவ மனைகளை அமைத்து ஐரோப்பாவிற்கு வழிகாட்டியுள்ளார்கள்.

- மத்திய காலத்தில் முஸ்லிம்கள் மருத்துவத்துறையில் பேர்போனவர்களாகவும், ஐரோப்பியர்கள் இருண்ட யுகத்தில் இருந்து அறிவைத்தேடி மத்திய கிழக்கிற்கு பயனித்து அதனைப் பெற்றுக் கொண்டதாகவும் ஐரோப்பிய அறிஞர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.


ISBN 978-624-5736-14-0

**முடிவுரை**

இவ்வாறான அம்சங்களினை நோக்கும் போது நவீன மருத்துவத்தின் வளர்ச்சியில் மத்திய கால முஸ்லிம்களின் பங்களிப்பு அளப்பெரியது என்பதை அறிய முடிகின்றது. அந்தவகையில் ஐரோப்பிய மருத்துவத்துறைக்கு பங்களித்த அறபு நூல்களாக கானுன் பித்திப், கிதாப் அல் மனாழிர், கிதாப் அத்தஸ்ரிப், அல் ஹாவி, தத்கிரத் அல் கஹ்லைன் போன்றவை முக்கியமானவையாகும். இதனை மேற்குலகம் அங்கீகரித்துள்ளது எனலாம். கி.பி. 1618இல் இங்கிலாத்தில் வெளியிடப்பட்ட மருந்தியல் நூலில் கிரேக்க அறிஞர்களான ஹிபொகிரடீஸ், கலன் எனும் இருவரது படங்களுடன் முஸ்லிம் மருத்துவரான அபூ அலி ஸீனா, அபூ ஸகரிய்யா, யுஹன்னா பின் மஸாவிஹ், என இவர்களது படங்களும் பிரசுரிக்கபட்டிருந்தன என்பது சுட்டிக்காட்டப்படத்தக்கதாகும்.

முஸ்லிம்களின் கண்டுபிடிப்புக்களை சார்ந்த அதே மருத்துவவியல் கண்டுபிடிப்புக்களும், இவர்களுடைய பல்வேறான மருத்துவ நூல்கள் பல ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்பட்டு பல நகரங்களிலும் பிரசுரிக்கப்பட்டமையும் அங்குள்ள மருத்துவ கல்லூரிகளில் அந்நூல்கள் பாடப்புத்தகங்களாக இருந்து அவை அந்த மருத்துவர்களால் பின்பற்றப்பட்டமையும் மத்திய கால முஸ்லிம் மருத்துவ அறிவு நவீன விஞ்ஞானத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மிகப்பெரும் பங்களிப்பு செய்துள்ளது என்பதை எவ்வித சந்தேகமுமின்றி விளங்க முடிகின்றது.

**உசாத்துணைகள்:**


Ali Tahri.(2012). Islamic Civilization’s Contribution to Science and Technology.*2nd Asia-Arab Sustainable Energy Forum*

Muhammad Adil Afridi.(2013). Contribution of muslim scientists to the world; An overview of some selected fields. *Revelation and Science,* 3(1):47-56

Hitti, K. (1970). History of the Arabs. Higher and further Education Division Macmillan publishers LTD.

Pulenthiran Nesan. Contribution of Medieval Islamic Thinkers to the development of Science in the Period of Renaissance.University of peradeniya

Yasmeen Mahnas Faruqi.(2006). contributions of Islamic scholars to the scientific enterprise. *Shannon Rresearch Press*, 7(4):391-399

Zakir Naik. (no date). The Quran and Modern Science. *Islamic Research Foundation.*

அபூபக்கர், ஏ.எம். (2001). அறிவியல் வளர்த்த முஸ்லிம்கள். சாய்ந்தமருது: *இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம். பக்.பக். 1-268.*

அனஸ். எம்.எஸ்.எம். அனஸ். (1996). விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானங்களும்: ஓர் முறையியல் நோக்கு. *பேராதனை: பண்பாட்டு ஆய்வு வட்டம் பேராதனை*

அமீன். ஸீ.எம். ஏ. (1992). புவியில் துறைக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு. *கொழும்பு: ஏசியன் ஏஜன்ஸீஸ்.*

இப்றாஹீம் முஹம்மது. (2008). முஸ்லிம்கள் வளர்த்த அறிவியற் அழகியற் கலைகள். *ஹெம்மாத்துகம: அல் ஹஸனாத் பப்ளிகேஷன்.*

முஹம்மது ஷரீப் றம்ஸீன். (1999). இஸ்லாமிய கலைகள் ஆய்வு இலக்கியம். *வவுனியா: மதார் உம்மா வெளியீடு.*

Ismail Salafi.(2012). விஞ்ஞான வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்களிப்பு. Https://w.w.w.jaffmamuslim.com/2012/10/blog-post-1179.html?m=1


ISBN 978-624-5736-14-0